இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 13.12.2025

# பழனிசாமியின் பழைய ஊழல்கள் -2

**● குட்கா வியாபாரிகளிடம் அரசாங்கத்தின் பெயரால் மாமூல் வசூல் செய்தது பழனிசாமி ஆட்சிதான் என்பதை மக்கள் இன்னும் மறக்கவில்லை.**

சென்னையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது. குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்தியது. அப்போது தங்களது வியாபாரத்துக்குத் துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், “டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது” என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப் படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது.

40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பிக்கள் பெயர்கள் இருந்தன. ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறையின் முதல் தகவல் அறிக்கையில் இவர்கள் பெயர் இடம் பெறாத வகையில் பழனிசாமி இவர்களைக் காப்பாற்றினார். சில ஊழியர்களை மாட்டி விட்டு அ.தி.மு.க. அமைச்சர்களைத் தப்பிக்க வைத்தார் பழனிசாமி.

**வருமான வரித்துறை, அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட கோப்பு ஒன்றை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள் பழனிசாமி ஆட்சியில். குட்கா வழக்கை விசாரித்த லஞ்ச ஊழல் தடுப்புத்துறை கூடுதல் டி.ஜி.பி. மஞ்சுநாதா திடீரென்று மாற்றப்பட்டார். அவர் இருந்தால் இந்த வழக்கை முறையாக நடத்திவிடுவார் என்று பயந்து தூக்கி அடித்தார் பழனிசாமி. உயர் நீதிமன்ற ஆணையின்படி விஜிலென்ஸ் ஆணையராக நியமிக்கப்பட்டு - குட்கா வழக்கை விசாரித்து வந்த வி.கே. ஜெயக்கொடி ஐ.ஏ.எஸ். 5 மாதங்களில் பழனிசாமியால் மாற்றப்பட்டார்.**

குட்கா வழக்கில் தொடர்புடைய சிவக்குமார், செந்தில்முருகன் - ஆகிய இரண்டு அரசு ஊழியர்கள் மீது ‘வழக்குத் தொடர’ சி.பி.ஐ. அனுமதி கோரியது. அதற்கு பழனிசாமி அரசு அனுமதி தரவில்லை. திரும்பத் திரும்பக் கேட்ட பிறகு 20 மாதங்கள் கழித்து அனுமதி அளித்தார் பழனிசாமி. அமைச்சர் விஜயபாஸ்கர், முன்னாள் டி.ஜி.பி., டி.கே. ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீதான நடவடிக்கைக்கு பழனிசாமி இறுதிவரை அனுமதி தரவே இல்லை.

எந்த அதிகாரிகள் மீது புகார் எழுந்ததோ, அவருக்கே பணி நீட்டிப்பு தரப்பட்டது பழனிசாமி ஆட்சியில். தன் மீதான குற்றச்சாட்டுக்குப் பரிகாரம் தேட வழக்குப் போட அவருக்கே அனுமதியும் தரப்பட்டது. பழனிசாமி ஆட்சியில் குட்கா மட்டுமல்ல, ஊழலும் தலைவிரித்தாடிய காட்சிகள் ஆகும். இந்த வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

- **பழனிசாமி ஆட்சியில் பல்வேறு டெண்டர்களை எடுத்து நடத்திய சுப்பிரமணியம், இராமலிங்கம் ஆகியோர் குடும்பத்துக்கும் பழனிசாமி குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம் என்பதை பழனிசாமி பகிரங்கமாகச் சொல்லத் தயாரா? இந்த சுப்பிரமணியமும் இராமலிங்கமும்தான் டெண்டர்களை எடுத்து பழனிசாமிக்கு பண சப்ளை செய்தவர்கள். இது யாருக்குமே தெரியாது என்பது போல யோக்கியர் வேஷம் போட்டுக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி. அரசாங்க கஜானாவை சம்பந்தி, சம்பந்திக்கு சம்பந்தி என்று முறைப்படி பங்கு வைத்தவர்தான் பழனிசாமி.**

1. யார் மீதுதான் ஊழல் புகார் இல்லை?
2. எனது உறவினர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள்!
3. எனது உறவினர்கள் ‘இ’ டெண்டர் போட்டது எனக்குத் தெரியாது!

- இவைதான் பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது சொன்ன பதில்கள் ஆகும்.

- முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, கே.பி.அன்பழகன், எம்.ஆர். விஜயபாஸ்கர், வீரமணி, தங்கமணி, புதுக்கோட்டை விஜயபாஸ்கர் ஆகியோர் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத் துறை ரெய்டு நடத்தி இருப்பது பழனிசாமிக்கு மறந்து போய்விட்டதா?
- டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். (2023 மே 22)
- கே.பி.அன்பழகன் வருமானத்துக்கு அதிகமாக 45.20 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக தர்மபுரி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 மே 22)
- காமராஜ் மீது வருமானத்துக்கு அதிகமாக 58.44 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக திருவாரூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 ஜூலை 11)
- இப்போதும் பழனிசாமி, பா.ஜ.க.வின் முதுகுக்குப் பின்னால் எதற்குப் பதுங்குகிறார் என்பது அனைவரும் அறியாதது அல்ல. கடந்த ஜனவரி மாதம் ‘ரெய்டு அஸ்திரத்தை’ பா.ஜ.க. எடுத்தது. பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. இதுதான் அவரை பா.ஜ.க.வை நோக்கிப் பணிய வைத்துள்ளது.

**இப்படி தொடக்கம் முதல் இப்போது வரை ஊழலால் உருவானவர் தான் பழனிசாமி. தனது ஊழலை மறைக்க, தன்னைக் காத்துக் கொள்ள அ.தி.மு.க.வை பலியிட்டுக் கொண்டு இருப்பவர் தான் பழனிசாமி. அதனால்தான் சொந்தக் கட்சித் தொண்டர்களே அவரை மதிப்பது இல்லை.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.12.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவினையொட்டி சந்தித்து பேசினார்கள். உடன் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

## ஒன்றிய முன்னாள் உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் மறைவு!

# தலைவர் கலைஞர் மீது பெரும் அன்பும் - மரியாதையும் கொண்டு நட்பு பாராட்டியவர்!

## மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச. 13 - முன்னாள் ஒன்றிய உள்துறை அமைச்சரும் மக்களவை முன்னாள் தலைவருமான சிவராஜ் பாட்டீல் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தியில், “தலைவர் கலைஞர் அவர்கள் மீது பெரும் அன்பும் மரியாதையும் கொண்டு நட்பு பாராட்டியவர், சிவராஜ் பாட்டீல் அவர்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

முன்னாள் ஒன்றிய உள்துறை அமைச்சரும் மக்களவையின் முன்னாள் தலைவருமான சிவராஜ் பாட்டீல் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

பொதுவாழ்வில் அரை நூற்றாண்டுகால அனுபவம் கொண்ட அவர், மக்களவைத் தலைவர், ஆளுநர் உள்ளிட்ட பொறுப்புகளிலும் தமது கடமையைத் திறம்பட ஆற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் மீது பெரும் அன்பும் மரியாதையும் கொண்டு நட்பு பாராட்டிய அவரது மறைவு வேதனையைத் தருகிறது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - மாவட்ட எல்லையில் எழுச்சிமிகு வரவேற்பு!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

**திருவண்ணாமலை, டிச.13 - திருவண்ணாமலையில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுடனுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சரும், கழகத் தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். இவர்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட எல்லையான, மேல்செங்கத்தில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.**



இதுகுறித்து, பொதுப்பணித்துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பணி பொறுப்பாளருமான எ.வ. வேலு விடுத்துள்ள அறிக்கையில்,

நெருப்பின் பொறிகளே நீங்கள்தான் வேண்டுமென, இன, மொழி, நாடு என அரசியல், பண்பாட்டுத் தளத்தில் இளைஞர்களை உணர்ச்சிப் பொங்க உருவாக்கியவரும், 1989, 1996, 2006 ஆகிய காலக்கட்டங்களில் இளைஞர்களின் எழுச்சியை உருவாக்கி, கழக ஆட்சி அமைத்து, நவீன தமிழகத்தை வடிவமைத்திட்ட திராவிட மாடல் நாயகன், முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகளுடன் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

இளைஞர் படையை நடத்தி வரும் துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களையும், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நாளை (14.12.2025 ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் 11.00 மணியளவில் மாவட்ட எல்லையான மேல்செங்கத்தில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. எல்லையில் அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும், கழக தோழர்களும் திரண்டு, எழுச்சியான வரவேற்பு அளித்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல்

# தொ.மு.ச. மாபெரும் வெற்றி! தனிப்பெரும் சங்கமாக தேர்வு!

## பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

*சென்னை, டிச. 13 - தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-*

*நமது நெஞ்சமெல்லாம் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் தொழிற்சங்கங்களில் முதன்மையான சங்கத்தை தேர்வு செய்ய தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல் 10.12.2025 அன்று ரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழ்நாடு முழுவதும் 51 வாக்குச் சாவடிகளில் நடைபெற்றது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்பட்டு வரும் எட்டு தொழிற்சங்கங்கள் தேர்தலில் போட்டியிட்டது.*

*14781 வாக்காளர்களில் 13018 பேர் வாக்கை செலுத்தியதில் 6699 பேர் (51.5 சதவிகிதம்) தொ.மு.ச. வின் இணைப்புச் சங்கமான தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனுக்கு வாக்களித்து முதன்மைச் சங்கமாக தேர்வு செய்துள்ளனர். 51.5 சதவிகித வாக்குகள் பெற்றதன் மூலம் தொ.மு.சங்கம் அங்கீகாரத் தேர்தலில் தனிப் பெரும் சங்கமாக வெற்றி பெற்றுள்ளது.*

*நுகர்பொருள் வாணிபக் கழக அங்கீகாரத் தேர்தலில் அண்ணா தொழிற்சங்கத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் தனது கட்சியினரின் முழு பலத்தையும் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தும் 15.7 சதவிகிதம் வாக்குகளை மட்டுமே பெற்று இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.*



*இந்தத் தேர்தல் வெற்றி முதல்வர் தளபதியார் அவர்கள் தலைமையின் மீது தொழிலாளர் வர்க்கம் முழு நம்பிக்கை வைத்துள்ளது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி இரண்டாவது முறையாக 2026 சட்டமன்றத் தேர்தலில் பெறப்போகும் வெற்றிக்கு முன்னோட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அங்கீகாரத் தேர்தல் வெற்றியை திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தொழிலாளர் வர்க்கத்தின் விடிவெள்ளி தளபதியார் அவர்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.*

*அங்கீகாரத் தேர்தலில் வெற்றி பெற அயராது உழைத்த கழக நிர்வாகிகள், பேரவை நிர்வாகிகள், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள், இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனைச் சேர்ந்த மத்திய சங்க, மண்டல சங்கங்களின் நிர்வாகிகள் ஆகியோருக்கும், தொழிலாளர் வர்க்கம் என்றும் தளபதியார் பக்கமே என்பதை வாக்களித்து நிரூபணம் செய்துள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் தொ.மு.ச. பேரவையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலூர் மாநகரம், தொரப்பாடி பகுதி, அரியூரில் புதிய பொது விநியோக கடையை தெற்கு மாவட்டச் செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, தொரப்பாடி பகுதி செயலாளர் ஆர்.கே.ஐய்யப்பன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.